तमिलनाडुकेन्द्रीयविश्वविद्यालय
*(संसदद्वारापारितअधिनियम 2009 केअंतर्गतस्थापित)*
CENTRAL UNIVERSITY OF TAMIL NADU
*(Established by an Act of Parliament, 2009)*
नीलक्कुड़ीपरिसर/Neelakudi Campus,कंगलान्चेरी/Kangalancherry,
तिरुवारूर/Thiruvarur - 610 005
Estate Section
estate@cutn.ac.in 04366 277 466

**CUTN/Estate/EOI/2022-23/01** **12.12.2022**

## Expressions of Interest / பொது அறிவிப்பு

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழக வளாகத்தில் (பயிலக வளாகம், நீலக்குடி மற்றும் குடியிருப்பு வளாகம், நாகக்குடி) குப்பைகளை அகற்றுவதற்கு / எடுத்து செல்வது தொடர்பாக பொது அறிவிப்பு விடப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் (பயிலக வளாகம், நீலக்குடி மற்றும் குடியிருப்பு வளாகம், நாகக்குடி) உள்ள அனைத்து கட்டிடங்களிலும், பொது இடங்களிலும் உள்ள குப்பை தொட்டிகளில் சேரக்கூடிய குப்பைகளை எடுத்து/ அகற்றி சுத்தம் செய்து குப்பைகளை பல்கலைக்கழக வளாகத்திற்கு வெளியே எடுத்து செல்வதற்கு வாகன வாடகை (எரிபொருள் மற்றும் ஓட்டுநர் கூலி உட்பட), வேலை ஆட்கள் கூலி மற்றும் இதர கூலிகளை சேர்த்து மொத்த தொகையை (ஒரு மாதத்திற்கு) குறிப்பிட வேண்டும்.

இதற்கான மொத்த தொகையை தங்களது கடிதத்தில் குறிப்பிட்டு அதனை ஒரு மூடிய முத்திரையிட்ட உரையில் வைத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாள் மற்றும் நேரத்திற்கு முன்பாக பல்கலைகழக பதிவாளரின் முகவரிக்கு அஞ்சலில் அனுப்பிவைக்குமாறும் அல்லது நிர்வாக கட்டிடத்தில் உள்ள அனுப்புதல் பிரிவில் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் (முகவரி: பதிவாளர் அவர்கள், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், நீலக்குடி வளாகம், கங்களாஞ்சேரி, திருவாரூர் - 610 005).

மிகக் குறைந்த மாதாந்திர தொகையை கோருபவருக்கு ஒன்று அல்லது இரண்டு வருடத்திற்கு மேற்கண்ட வேலையை செய்வதற்கான பணி ஆணை வழங்கப்படும்.

குறிப்பு :-

- தினந்தோறும் எடுக்கக்கூடிய குப்பைகளை மக்கும் மற்றும் மக்கா குப்பைகளாக பிரித்து எடுக்க வேண்டும்.
- மக்கும் குப்பைகளை பல்கலைக்கழக தோட்டக்கலை பேராசிரியர்களின் வலிக்காட்டுதலின்படி அவர்களின் மக்கும் குப்பை சேமிப்பு கிடங்கில் சேகரிக்க வேண்டும் மற்றும் மக்கா குப்பைகளை வளாகத்திற்கு வெளியில் (திருவாரூர் நகராட்சி குப்பை கிடங்கிற்கு) எடுத்து செல்ல வேண்டும்.
- குப்பைகளை அகற்றி அனைத்து பயனாளர்களிடம் இருந்து தினந்தோறும் தவறாமல் கையெழுத்து பெற வேண்டும்.

| | |
|---|---|
| தேதி | **: 03.01.2023** |
| நேரம் | **: மாலை 03.00 மணிக்கு** |
| இடம் | **: சார்பு துணைவேந்தர் கூட்ட அரங்கு, நிர்வாக கட்டிடம், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.** |

குறித்த தேதி மற்றும் நேரத்தில் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள பொதுமக்கள் மேலே சொல்லப்பட்ட பொது கூட்டத்தில் கலந்து கொள்ளவும்.

12/12/2022

செயற்பொறியாளர்,
பண்ணைப்பிரிவு,
தமிழ் நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,
திருவாரூர்.

Executive Engineer,
CUTN